# இந்துக்களின் சடங்கு முறைகள்

- இந்துக்களுக்குப் பிறப்பதற்கு முன்னும், பிறந்து வாழும் காலத்திலும், இறந்த பிறகும் சடங்குகள் விதிக்கப்பட்டுள்ளன. இச்சடங்கினை கிரியை என்பர்.
- ஆசிரியர் தொல்காப்பியனார் இதனைக் கரணம் எனக் கூறினார்.
- மந்திரத்தோடு விளக்கமாகச் செய்யப்படும் கரணங்கள் சிறப்பாகும்.
- மந்திரம் அதிகம் கலவாமல் செய்யும் சடங்கு பொதுவாகும்.
- இவை சோடாசஸம்ஸ்காரங்கள் எனப்படும். அவற்றில், சிலமட்டிலும் தற்காலத்தில் நடைமுறையில் இருக்கின்றன.

1. <u>பும்ஸவனம்:</u>

- ஒரு பெண் கருக்கொண்ட மூன்றாவது மாதத்தில் கர்ப்பத்திற்கு எவ்வித ஊறும் உண்டாகாதவாறு இறைவனைப் பிரார்த்திப்பதாகும்.

2. <u>ஸீமந்தம்:</u>

பெண் கருக்கொண்ட நான்காவது அல்லது எட்டாவது மாதத்தில் குழந்தையின் இரட்சையின் பொருட்டுச் சில தேவர்களை வேண்டுதலாகும். கர்ப்பிணியின் தலைமுடி வகுத்தல், கீதங்கள் பாடுதல், வளைகாப்பிடுதல் முதலியன இக்கிரியையின் சடங்குகளாகும்.

## விரதங்களின் பட்டியல்

| எண் | மாதம் | விசேடம் | தேவதை | விரதமுறை | பலன் |
|---|---|---|---|---|---|
| 1. | ஆவனி | சதுர்த்தி | கணபதி | கணபதி ஹோமம் | ஜனரஞ்சனம் |
| 2. | ஆவனி | ஓணம் | விஷ்ணு | | |
| 3. | ஆவனி | அஷ்டமி ரோகிணி | கிருஷ்ணன் | பாதி இரவுவரை உறக்கமின்மை | புத்திரப்பேறு |
| 4. | புரட்டாசி | ஆயில்யம் | சர்ப்பம் | சர்ப்பபலி முதலியன | சர்ப்பப் பிரீதி |
| 5. | புரட்டாசி | நவராத்திரி | தேவி | தேவி, இலட்சுமி, சரஸ்வதி மூவரையும் பூசித்தல் | ஆற்றல், செல்வம், கலைவளர்ச்சி |
| 6. | ஐப்பசி | தீபாவளி நரகசதுர்த்தசி | கிருஷ்ணன் | எண்ணெய் தேய்த்துக் குளித்தல், புத்தாடை உடுத்தல் | மகிழ்ச்சி |
| 7. | கார்த்திகை | கிருத்திகை | சுப்பிரமணியர் | விளக்கேற்றல் ஜோதி தரிசனம் | பாவநிவர்த்தி |
| 8. | கார்த்திகை மார்கழி | தநுர் மண்டலம் 41 நாள் | | பஜனை வழிபாடு | வாக்சுத்தி |
| 9. | மார்கழி | சுக்ல ஏகாதசி | விஷ்ணு | உபவாசம் | ஆத்ம சுத்தி |
| 10. | மார்கழி | ஆதிரை | சிவன் | நடராஜர் வழிபாடு | ஆனந்தம் |
| 11. | தை | சங்கிராந்தி | சூரியன் | சூரிய பூஜை | தானிய சம்பத்து |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தை | அமாவாசை | பிதுர்க்கள் | தர்ப்பணம் சிராத்தம் | வம்ச விருத்தி |
| 12. | மாசி | சிவராத்திரி | சிவன் | இரவில் நான்குகாலபூஜை செய்தல் | சிவானுக்கிரகம் |
| 13. | பங்குனி | பரணி | பத்திரகாளி | காளியைப் பூஜித்தல் | வீரம் |
| 14. | சித்தரை | விஷு | சூரியன் | ஆலய வழிபாடு | பொருட்பேறு |
| 15. | வைகாசி | விசாகம் | சுப்பிரமணியர் | ஆலய வழிபாடு | அட்டசித்தி |

3. <u>ஜாதகர்மம்</u>:

- இது குழந்தை பிறந்தவுடன் செய்யவேண்டிய கிரியையாகும்.
- தேனும் நெய்யும் கலந்து தேவதைகளுக்கு நிவேதிப்பர். வந்திருந்தோர்களுக்குப் பழமும் சர்க்கரையும் வழங்குவர்.
- குழந்தை நீண்ட ஆயுளோடு வாழவும், அதற்குப் புத்தி உண்டாகவும், இந்திரன் தனசம்பத்தைக் கொடுக்கவும், சாமர்த்தியம், அழகு முதலியன பெறவும் பிரார்த்திப்பர்.

4. <u>நாமகரணம்</u>:

- தந்தையின் தந்தை பெயரையோ, தாயின் தந்தை பெயரையோ, தெய்வத் திருநாமத்தையோ பிள்ளைக்குச்சூட்டி ஆசிர்வதிப்பதாகும்.

5. <u>புண்ணியாவாசனம்</u>:

- இதில் விசேட மந்திரக்கிரியைகள் எதுவும் இல்லை. புண்ணியாவாசனம் செய்து சுத்தியின்பொருட்டு அந்நீரை மாவிலைகளால் வீட்டின் பலபகுதிகளிலும், மனிதர்கள்மீதும் தெளிப்பர்.

6. <u>நிஷ்க்ராமணம்</u>:

- குழந்தை பிறந்து நான்கு மாதங்கள் ஆனபிறகு முதன் முதலாகக் குழந்தையை வீட்டைவிட்டு வெளியில் கொண்டு செல்வர்.
- குழந்தையின் யாத்திரைகள் அனைத்தும் மங்களமாகக் கடவதும் எனப்பிரார்த்திப்பர்.

7. <u>அன்னப்பிராசனம்</u>:

- ஆறாம் மாதத்தில் சோறும், தயிரும், நெய்யும், தேனும் கலந்து பிள்ளைக்கு முதன் முதலாகச் சோறூட்டுதலாகும்.
- குழந்தைக்கு உடல்வலியோடும், நீண்ட நாள் உணவு முட்டின்றி உண்டுவாழவும் அனுக்கிரக்கிக்க வேண்டுமெனக் கடவுளைப் பிரார்த்தித்து சோறூட்டுவர்.

வாய்மையே வெல்லும்

8. <u>வித்யாரம்பம்</u>:

- இது பள்ளியில் வைத்தல் எனப்படும். குழந்தை ஐந்து வயதானதும் நவராத்திரி விழா முடிவான விஜயதசமியிலோ, வேறு நல்லநாளிலோ முதன்முதலாகக் கல்வி பயிற்றுவித்தல் ஆகும்.
- ”ஹரி ஸ்ரீ கணபதயே நம” எனக்கூறிக் குழந்தையை கணபதியை வணங்கச்செய்து, பின்னர் ”குருவாழ்க! குருவே துணை” எனக்கூறச் செய்து, குருவை வணங்கும்படிச் செய்யவேண்டும்.
- பின் சரஸ்வதி தேவியை வணங்கி அரிசியில் அரியென்னும் எழுத்தை எழுதச் செய்து சொல்லும்படிச் செய்ய வேண்டும்.

9. <u>கர்ண பூஷணம் (காதுகுத்தல்)</u>

- காதுகுத்தலின் நோக்கம் குண்டலம், தோடு முதலிய காதணிகளைத் தொங்கச் செய்வதற்காகும்.
- தங்கத்தின் வழியாகப்பாயும் நீர் உடம்புக்கு ஆரோக்கியம் தருகிறது.
- நல்ல விஷயங்களை செவியின் உள்ளே செலுத்தவேண்டும், தீய விஷயங்களை உள்ளே செலுத்தாது துளை வழியாக வெளியே செலுத்திவிட வேண்டும் என்பதனையும் இத் ”துளை” குறிக்கிறது.

10. <u>சௌளம் (குடுமிவைத்தல்):</u>

- குழந்தை முதன் முதலாக சவரஞ் செய்து வைத்தலாகும். தாயின் மடியில் குழந்தையை வைத்துத் தந்தையும் உடன் இருந்து செய்யும் கிரியையாகும்.

11. <u>உபநயனம்:</u>

- குழந்தை ஏழு வயதானதும் உபநயனம் அல்லது பூணூல் இடுதல் எனும் சடங்கை நடத்திவைக்கவேண்டும்.
- இதில் முக்கிய அம்சம் காயத்திரி மந்திர உபதேசமாகும்.
- உபநயனக் கிரியை செய்யாதவர்களுக்குத் தீக்கை செய்து வைக்கவேண்டும்.
- உபநயனம் அல்லது தீக்கை பெறுவதற்குமுன் ஒரு பிறப்பும், உபநயனம் அல்லது தீக்கைபெற்றபின் ஒரு பிறப்பும் ஆக ஒரு மனிதனுக்கு ஒரு பிறப்பில் இருபிறப்பு உண்டென இந்துமதம் கூறுகின்றது.

12. <u>குருகுலவாசம்:</u>

- ❖ குழந்தைகள் குருகுலத்தில் குருவுடன் இருந்து கல்வி பயின்று வருவது நமது பூர்வீக வழக்கமாகும்.
- ❖ குருகுலத்தில் வைத்து அவர்களுக்குக் கல்வியும், நன்னடத்தையும் கற்றுக்கொடுக்கப்படும்.
- ❖ மாணவர் குரு கூறிய பணிவிடைகள் அனைத்தையும் செய்து வருவர்.
- ❖ ஆடம்பர வாழ்க்கையின்றி அமைதியோடும், கீழ்ப்படிதலோடும் பயில்வர்.

13. திருமணம்:

- ❖ குருகுலவாசம் முடிந்தபின்னர், குருவின் அனுமதி பெற்றுத் திருமணம் செய்துகொள்வர்.
- ❖ இச்சடங்கில் சங்கற்பம், புண்யாகம், பஞ்சகவ்வியம், இரட்சாபந்தனம், அங்குரார்ப்பணம், கும்பபூஜை, அக்கினிகாரியம், மூர்த்தி பூஜை, தானம் முதலியன முறையே செய்யற்பாலன.

<u>குறிக்கோள் பகர்தல் (சங்கற்பம்)</u>

- ❖ குறிக்கோள் பகரும்பொழுது காலத்தையும், இடத்தையும், செயலையும் விளக்கிப் பிரார்த்திக்க வேண்டும்.
- ❖ சங்கற்பம் விவாகம் முதலியவற்றை வடமொழியில் முறையாய் நடத்துவது உசிதம்.
- ❖ இயலாதவர்கள் அடியிற் கூறுமாறு சங்கற்பம் முதலியன நடத்தலாம்.
- ❖ பாரத நாட்டில் திருநெல்வேலியில் - மகனுக்கும் - மகளுக்கும் திருமணம் செய்துவைத்தற் பொருட்டுப் பூஜை தொடங்குகிறேன்.
- ❖ அருள் புரிக எனப் பகர்தல்.

<u>புனிதநீர் சுத்தி (புண்யாவாசனம்):</u>

- உடம்மையும் உள்ளத்தையும் சுத்தி செய்தற் பொருட்டு புனித நீர் சுத்தி செய்ய வேண்டும்.
- தண்ணீரை திருவருள் பெருக்காகக் கருதி மணமக்கள் உடம்பில் தெளித்து அவர்களைப் புனிதமாக்க வேண்டும்.

<u>புனிதநீர் அமைக்கும்முறை (பஞ்சகவ்வியம்)</u>

- அரிசியைக் கீழே பரப்பிக் கும்பம் வைத்து, தர்ப்பையிட்டு, மும்மூர்த்திகளைத் தியானித்து, ஐந்து எழுத்து ஓதி, பால், தயிர், நெய், கோசலம், கோமயம் எனும் பசுவிலிருந்து கிடைக்கும் ஐந்து பொருட்களை ஒன்று சேர்த்துப் பஞ்சகவ்வியமாக்கி மணமக்களை குடிக்கச் செய்ய வேண்டும்.

<u>காப்புக்கட்டுதல் (இரட்சாபந்தனம்)</u>

- திருமணம் நடக்கும்பொழுது இடையூறு வராமல் இருக்க ஆணுக்கு வலது கையிலும், பெண்ணுக்கு இடது கையிலும் மஞ்சள் நூலில் மஞ்சள் துண்டைக்கட்டிப் பிள்ளையாரை வணங்கிக் காப்புக்கட்டவேண்டும்.

<u>முளையிடுதல் (அங்குரார்ப்பணம்)</u>

- இந்துக்களுக்கு உழவு மிகவும் முக்கியமானதால் அதைச் சிறப்பிக்கும் முறையிலும், சந்ததி விருத்தியின் பொருட்டும், விவாக காலத்தில் செந்நெல், பயிறு, எள்ளு, வெண்கடுகு, உளுந்து, மொச்சை முதலிய தானியங்களை பன்னிரண்டு மண்பாலிகைகளில் இட்டு வளர்க்க வேண்டும்.

## குடவழிபாடு (கும்ப பூஜை)

- கும்பத்திலுள்ள நீர்வழியாகக் கடவுளை வழிபடுவது ஆதலால் குடவழிபாடு அவசியமாயிற்று.
- ஓர் இடத்தில் கோலமிட்டு மாப்பொடி, மஞ்சள் பொடி தூவி, எள்ளும் அரிசியும் ஒன்றின் மேல் ஒன்றாக விரித்துக் கும்பம் வைத்து அதில் நீரை நிரப்பி நூல் சுற்றி மாந்தளீர், அரசிலை, தேங்காய், பழம், தர்ப்பை முதலியன வைத்து எந்தக் கடவுளைப் பூஜிக்கின்றோமோ அந்தக் கடவுள் அதில் வீற்றிருப்பதாகக் கருத வேண்டும்.

## எரியோம்பல்(அக்கினிகாரியம்)

- தூய மணலில், உமி விரித்து ஆல், அரசு, மா, புரசு, முருக்கு முதலியவற்றின் குச்சிகளை வைத்து தீ மூட்டி நெய், பொரி, தானியம், முதலியன பெய்து, எரியும் தீயை இறைவனாகக் கருதி வழிபட வேண்டும்.

## வடிவ வழிபாடு (மூர்த்தி பூஜை)

- இறைவனை ஒரு வடிவத்தில் அங்கு எழுந்தருளியிருப்பதாக வழிபட்டுத் தோத்திரங்கள் பாட வேண்டும்.

## தானம்

- இந்நாளில் ஏழை எளியவர்களுக்கும், வறிஞர் முதலியோர்களுக்கும் பலவகைப் பொருள்களைத் தானமாகக் கொடுத்தல் வேண்டும்.

## கைப்பிடித்துக்கொடுத்தல்

- மணமக்களுக்கு மாலை மாற்று, ஊஞ்சல் முதலியன நடத்தி மணமக்களை மணமேடையில் அமர்த்தவேண்டும்.
- மணமகளின் தந்தை தன் மகளின் கையை மணமகன் கையில் வைத்து ”என் அருமைப் புதல்வியைத் தங்களுக்கு வாழ்க்கைத் துணையாக உள்ளும் புறமும் ஒத்து அளிக்கின்றேன்,
- நீங்கள் இரண்டுபேரும் பூவும் மணமும் போலப் பொருந்தி வாழ்வீர்களாக” என வாழ்த்த வேண்டும்.
- மணமகன் மணப்பெண்ணைப் பார்த்து ”நான் உன்னை எனது வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொள்கிறேன், உன்னுடைய நல நட்டங்களில் நான் பங்குகொள்வேன், உன்னுடன் உடலும் உயிரும் போலவும், கண்ணும் இமையும் போலவும் கலந்து வாழ்ந்து வருவேன்” எனக்கூறல் வேண்டும்.
- மணமகள் மணமகனை நோக்கி ”தங்களை எனது வாழ்க்கைத் துணைவராக உள்ளும் புறமும் ஒத்து ஏற்றுக்கொள்ளுகிறேன், தங்களையே கடவுளாகக் கருதி வாழ்வேன்.
- தங்கள் மனம் நோக நான் ஏதும் செய்யேன், உத்தமப் பதிவிரதையாக வாழ்ந்து வருவேன்.
- இல்லற நெறியை இனிது நடத்தி நல்லறம் பேணி வருவேன்” எனக் கூறல் வேண்டும்.

## திருமங்கல நாண்பூட்டல்

- பெரியோர்களின் ஆசிர்வாதத்திற்குப்பின் மணமகன் தனது சகோதரியின் உதவியோடு திருமங்கல நாணை ஆச்சாரியன் கொடுக்க மணமகள் கழுத்தில் பூட்ட வேண்டும்.
- பின்னர் மணமக்களுக்குக் கண்ணேறு (திருட்டி) கழித்தல் வேண்டும்,
- மங்கலப் பொருட்களுடன் மணமக்கள் மணமேடையைச் சுற்றி வலம்வந்து மனையினுட் புகுந்து பால் பழம் உண்ணல் வேண்டும்.
- மறுதினம் பூஜை முடித்து மறுவீடு சென்றுவரல் வேண்டும்.

## சஷ்டி அப்த பூர்த்தி (அறுபதாம் ஆண்டு நிறைவுவிழா)

- இவ்விழா கணபதி, தட்சிணாமூர்த்தி, துர்க்கை, நந்தி, பைரவர், நவக்கிரகங்கள் முதலியோர்களை வழிபட்டுச் செய்யும் கிரியையாகும்.
- பெற்றோரிடத்து நன்றி செலுத்துவதன் பொருட்டும் அவர்கள் உடல்நலம் குன்றாது திடம்பட்ட நலத்துடன் நீடித்து வாழ வேண்டும் எனவும் கருதிச் செய்யப்படும் சடங்காகும்.
- திக்பாலர்களுக்கும், முனிவர்களுக்கும் சிறப்பு வழிபாடு செய்யலாம். அன்று உருத்திராக்க மாங்கல்யம் பூட்டுவர்.
- சிற்றின்ப வாழ்க்கையை வெறுத்துக் கடவுள் பணியை மேற்கொண்டு இனிமேல் ஆன்மீக நெறியில் நிலைநிற்க வேண்டுமென அத்தம்பதியர் சங்கற்பம் பூண்பதை இது விளக்குகின்றது.

## சதாபிடேகம்

- எண்பது அல்லது எண்பத்து நான்கு ஆண்டுகளில் செய்யும் சடங்குக்கு சதாபிடேகம் என்று பெயர்.
- எண்பது ஆண்டுக்கு மேல் வாழ்ந்தவர்கள் ”ஆயிரம் பிறை கண்டவர்” எனக் கூறுவர்.

## அபரக்கிரியை

- ஒரு மனிதர் இறந்தபின் அவனது ஆன்மா நலம் அடைதற்பொருட்டு, அவனது மக்கள் முதலியோர் செய்யும் கிரியைக்கு அபரக்கிரியை என்று பெயர்.
- அபரம்-பிந்தியது, மக்கள் செய்யும் கிரியை இறந்தவனை ஈடேற்றுகின்றது. மகனைப் புத்திரன் என்பர்.
- புத்திரன் என்பதற்குப் புத்தென்னும் நரகத்தில் தந்தை விழாமல் கரையேற்றுபவன் என்பது பொருளாகும்.
- இதனாலேயே வள்ளுவர்.

> ”தம்பொருள் என்ப தம்மக்கள் அவர்பொருள்
> தந்தம் வினையால் வரும்” எனக் கூறியுள்ளார்.

- இறந்தவர்களுக்குப் புதல்வர் முதலியோர் செய்யும் கிரியைகள் அவர்களுக்குச் சாந்தி அளிக்கின்றன.
- ஆதலால், தாய் தந்தையர்க்கு அவர்கள் இறந்த பிறகு பிள்ளைகள் செய்ய வேண்டிய கடமைகளை முட்டுப்பாடின்றிச் செய்தல் வேண்டும். அதுவே அபரக்கிரியையாகும்.
- அந்த அபரக்கிரியை அந்தியேட்டி (அந்திய + இட்டி = அந்தியேட்டி, இறுதியில் செய்யப்படும் யாகம்) அத்தி சஞ்சயனம், பாஷணபூசை, சிராத்தம் என வகைப்படும்.

1. <u>அந்தியேட்டி:</u>

- ஆன்ம சுத்திக்காகச் செய்யப்படும் சமய அனுட்டானத்தில் நேர்ந்த குறைகள் அனைத்தும் இதனால் நீங்கும்.
- பேரிகை அடித்துப் கும்ப பூசை செய்யவேண்டும். கும்பதீர்த்த நீரை பிரேதத்தின்மேல் ஊற்ற வேண்டும்.
- பின்னர் மஞ்சள்பொடி, மாப்பொடி முதலியவற்றை நீரில் கலந்து அதனையும் ஊற்றி பிரேதத்துக்கு ஆடைகட்டி அதனைப் பாடையின்மேல் வைத்து மேளதாளங்களுடன் சுடலைக்குக் கொண்டுசெல்ல வேண்டும்.
- சுடலையில் ஆச்சாரியன் யாகேசுவரி பூசை, கும்ப அக்கினி பூஜை முதலியன செய்யவேண்டும்.
- கிரியை செய்வோன் ஸ்நானம் செய்து சிவகும்பத்தைத் தலையில் வைத்துக் கும்பத்தில் துவாரம் செய்து சிதையை மூன்று தரம் சுத்தி தலைப்பக்கத்தில் நின்று உடைத்து, பிரேதத்தின் வாயில் அரிசி இட்டு, குண்டாக்கினியை எரியப் பண்ணி நெய், தேன், பால் இவற்றை சிரசில் இட்டு, பூர்ணாகுதி செய்யவேண்டும்.
- அந்த மந்திரக்கருத்தாவது, ”அக்கினிதேவனே! மந்திரத்தால் பரிசுத்தமாயிருக்கிற பிரேதத்தினது மந்திரத்தால் உண்டான பூர்ணாகுதியை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

2. <u>அத்தி சஞ்சயனம்:</u>

- அத்தி சஞ்சயனம் என்பதற்கு எலும்பைச் சேகரித்தல் என்பது பொருள்.
- நெருப்புத் தணிந்தபிறகு பிருதிவி முதலிய முப்பத்தாறு தத்துவங்களையும் பூசித்து, சிதையில் நீரைச் சொரிந்து, பிரித்து, கால், கை, மார்பு, நெஞ்சு, முகம், தலை முதலிய பகுதிகளின் எலும்பை அதற்குரிய மந்திரத்ததைக் கூறி எடுத்துப் பாத்திரத்தில் வைத்து, அதை புண்ணியதீர்த்தத்தில் போடவேண்டும். சாம்பலை ஆழ்ந்த நீரில் இடவேண்டும்.

3. **சிராத்தம்:**

- சிரத்தையுடன் செய்யப்படுவது சிராத்தமாகும்.
- பிதுர்க்கள் இறந்த நாளில் அவர்களின் மேல்கதிக்காக சந்ததிகள் சிரத்தையுடன் செய்யும் கிரியையாகும்.
- இறந்த நாளேயன்றி அமாவாசை, வருடப்பிறப்பு முதலிய நாட்களிலும், சிறந்த தீர்த்தம், கோவில் உள்ள இடங்களிலும் இது செய்ய வேண்டும்.

**சிராத்தம் கொடுக்கும்போது சொல்லவேண்டிய மந்திரத்தின் பொருள்,**

- "கலியுகத்தில், ஜம்புத்தீவில், பரதகண்டத்தில் - ஆண்டில் - அயனத்தில் - ருதுவில் - மாசத்தில் - பட்சத்தில் - திதியில் - வாரத்தில் - நட்சத்திரத்தில் எனது பிதா - நாமமுடையவர்க்கு சிவயோகம், சிவகரணம் சித்திப்பன் பொருட்டு அவரது புத்திரனாகிய நான் இந்த சிராத்தத்தைச் செய்கின்றேன். இதனை ஏற்றருளி ஆசிர்வதித்து அருளப் பிரார்த்திக்கின்றேன்".
- மனித வாழ்வு பிறந்தது முதல் இறப்பது வரையில்தான் உண்டு எனச் சிலர் கருதுகின்றனர். ஆனால், நமது இந்துமதம் மனிதன் பிறப்பதற்கு முன்பும், பிறந்து வாழும்பொழுதும், இறந்தபின்பும் அவ்வாழ்வு உண்டென வலியுறுத்தி அதற்குரிய கிரியைகளையும் வகுத்துள்ளது.
- அக்கிரியைகளை தவறாது ஒவ்வொரு இந்துவும் கைக் கொண்டு ஒழுகித் தாங்களும் கடைத்தேறி, தங்கள் முன்னோர்களையும் கடைத்தேற்ற வேண்டும் என்பதை இதுகாறும் கூறிய சடங்கு முறைகள் இனிது விளக்குகின்றன

------*****-----****----